நீங்கள் எச்.ஐ.வி பரிசோதனைக்கு ஆமோதித்தால் தான் உங்களைப் பரிசோதிப்பார்கள். நீங்கள் மற்றய இரத்தப் பரிசோதனை செய்யும் போது உங்களை எச்.ஐ.விக்கு பரிசோதிக்க மாட்டார்கள். உங்கள் ஆனுமதியின்றி பரிசோதிப்பது சட்ட விரோதமான செயலாகும்.



இரத்தத்தில் எச்.ஐ.வி எதிர்ப்பொருள் தெரிவதற்கு சில காலம் எடுக்கலாம். மிகச் சரியான எச்.ஐ.வி பரிசோதனைக்கு நீங்கள் மூன்று மாதங்கள் பொறுத்திருந்து பரிசோதிக்கவும்.





## நான் பரிசோதிக்க தீர்மானித்தால் எனது கணவருக்கு அல்லது துணையாளருக்கு எப்படி எடுத்துரைக்க வேண்டும்?

உங்கள் துணையாளருடன் எச்.ஐ.வி. பரிசோதனையைப் பற்றி உரையாடுவது என்பது இலகுவான விடயமல்ல. ஏனென்றால் அவர் தன்னை நீங்கள் நம்பவில்லை என்று எண்ணக்கூடும் அல்லது நீங்கள் மற்றவர்களுடன் உடலுறவு வைத்துருப்பதாக நினைக்கலாம். நீங்கள் உங்களுக்கு மட்டுமே உங்கள் எச்.ஐ.வி. நிலையைப் பற்றி கூறும் நிலையத்தில் பரிசோதித்தால் நீங்கள் மட்டுமே உங்கள் எச்.ஐ.வி. தராதரத்தை அறிந்த பின் உங்களுடைய துணைவருடன் கலந்துரையாடலாம்.

இந்த விடையத்தைப் பற்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிந்தெடுத்து அலசி ஆராய்ந்து உரையாடவும். நீங்கள் ஒரு நண்பர்/நண்பியுடனோ பரிசோதிக்கும் முன் கலந்துரையாடலாம். நீங்கள் கர்ப்பமாக இருந்தால் உங்கள் வைத்தியரை உங்கள் துணைவருக்கு எல்லாக் கர்ப்பிணிப் பெண்களும் எச்.ஐ.வி.க்கு பரிசோதிக்க வேண்டிய விடயத்தை எடுத்துரைக்கவிடலாம்.

## ஏனது குடி பெயர்ப்பு பத்திரங்கள் பெறுவதற்காக நான் எச்.ஐ.வி.க்கு பரிசோதிக்க வேண்டுமா?

உங்கள் வழமையான குடி பெயர்ப்பு பத்திரங்கள் பெறுவதற்கான உடற் பரிசோதனை போது உங்களை எச்.ஐ.வி.க்கு பெரும்பாலும் பரிசோதிக்க வினவுவார்கள். உங்களுக் எச்.ஐ.வி. இருப்பதாக அறிந்தால் குடிப்பெயர்ப்பு பத்திரம் தரவும் மறுக்கலாம். ஒரு வழக்கறிஞ்ஞருடன் குடிப்பெயர்ப்பு பத்திரங்கள் பெறுவதற்கான உடற் பரிசோதனையி முன கலந்தாலோசித்து உங்கள் வழிமுறைகளை அறிந்து கொள்ளுங்கள்.







நான் எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்டு இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலரும் ஆரொக்கியமாக பல ஆண்டுகள் வாழ முடியும். நீங்கள் எச்.ஐ.வியினால் பாதிக்கப்பட்டதை அறிவதன் மூலம் உங்களை நீண்ட நாளைக்கு ஆரொக்கியமாக வாழ உதவும். நீங்கள் குழப்பமடைந்து பயந்த நிலையில் இருக்கலாம். ஒரு நம்பகமானவருடனோ, சமூக சேவையாளருடனோ அல்லது ஆலொசகருடனோ உரையாடுவது உங்களுக்கு உதவும்.

# Community Resources

## Sexual Health Clinics and Community Health Centres

| | |
|---|---|
| Hassle Free Clinic* | 416-922-0566 |
| Centre Medico Social Comunautaire* | 416-922-2672 |
| Immigrant Women's Health Centre | 416-323-9986 |
| Planned Parenthood Toronto* | 416-961-0113 |

(*Anonymous testing sites)

## Legal

| | |
|---|---|
| HIV AIDS Legal Clinic of Ontario | 416-340-7790 |

## Support Services

| | |
|---|---|
| Alliance for South Asian AIDS Prevention | 416-599-2727 |
| African Community Health Services | 416-591-7600 |
| Africans in Partnership Against AIDS | 416-924-5256 |
| AIDS Committee of Toronto | 416-340-2437 |
| Black Coalition for AIDS Prevention | 416-977-9955 |
| Centre for Spanish Speaking Peoples | 416-925-2800 |
| St. Stephens Community House | 416-926-8221 |
| Voices of Positive Women | 416-324-8703 |
| Women's Health in Women Hands | 416-593-7655 |

Funded by the City of Toronto and the ACT
Community Partners Fund •
Published 06.03





Women's Outreach Network

# பெண்களே ! நாங்கள் எங்களை நாங்களே பராபரிப்போமாக!











## எச்.ஐ.வி. என்றால் என்ன?

எச்.ஐ.வி. என்ற வைரஸ் தான் எய்ட்ஸ் உருவாகக் காரணமாகும்.

எச்.ஐ.வி. என்பது மனிதரின் பிறபொருள் எதிர்ப்புத்தன்மையை இழக்க வைக்கும் வைரஸ் என்று பொருள்.

எய்ட்ஸ் என்ற நோய் மக்களைப் பல வியாதிகளுக்கும் உள்ளாக்கிறது.



## எச்.ஐ.வி. உண்மையாகவே பெண்களைப் பாதிக்கின்றதா?

உலகத்திலுள்ள அரைவாசிக்கும் மேற்பட்ட பெண்கள் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோருக்கு தாங்கள் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்ட விடயமோ அல்லது அவர்களின் குழந்தைகளின் நோய் தொற்று பற்றியோ நோய் முற்றும் வரை அறியாமலேயே இருக்கிறார்கள். எச்.ஐ.வி./எய்ட்ஸ் எல்லா சமூகங்களையும் பாதிக்கிறது. ஆனால் இந்த விடயத்தை மனம் திறந்து மற்றவருடன் உரையாடுவது கடினமாகும். ஏனெனில் பெரும்பாலானவர் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டவரை கெட்ட நடத்தையில் ஈடுபட்டவர்கள் என்றே நினைக்கிறார்கள்.

## பெண்களுக்கு எப்படி எச்.ஐ.வி தொற்றுகிறது?

பெரும்பாலும் பின்வரும் வழிகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எச்.ஐ.வி தொற்றுகிறது:

- *குதத்தின் மூலம் அல்லது யோனி மூலம் ஆணுறையின்றி உடலுறவு கொள்வதனால்.
- *போதை வஸ்து ஏற்றுவதற்காக, தோடு மற்றும் உடல் வளையங்கள், பச்சை குத்துவதற்காக ஒரே ஊசியை பயன்படுத்துவதால்.
- *நீங்கள் கர்ப்பமாக இருந்தால் கர்ப்பத்தின் போதும், பிரசவத்தின் போதும், தாய்ப்பால் கொடுக்கும் போதும் உங்களில் இருந்து உங்கள் குழந்தைக்கு கடத்தப்பட வாய்ப்புண்டு.
- *இரத்த தானம் அல்லது இரத்த பரிமாற்றத்தின் போதும் கடத்தப்பட வாய்ப்புண்டு ஆனால் கனடாவில் அனைத்து இரத்தமும் இன்னொருவருக்கு ஏற்று முன் பரிசோதிக்கப்படுகிறது. ஏனினும் மற்றைய நாடுகளில் இவ்வாறு பரிசோதிக்கப் படுவதில்லை.



எச்.ஐ.வி இலகுவாக தொற்றக் கூடிய வைரஸ் அல்ல. இது நுளம்புக் கடியினாலோ, இன்னொருவருடைய பொருட்களை பாவிப்பதாலோ அல்லது எச்.ஐ.வி உள்ளவரை பராபரிப்பதானாலோ தொற்ற முடியாது.



## எப்படி எனக்கு எச்.ஐ.வி. உண்டு எனக் கூறமுடியும்?

உங்களுக்கு எச்.ஐ.வி. உண்டு என்று இரத்த பரிசோதனை மூலம் மட்டுமே கூறமுடியும். ஒருவருக்கு எச்.ஐ.வி. உள்ளது என வெளிப்படையாக பார்த்து கூறிவிட முடியாது.

எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டவர் பல வருடங்கள் நோயின்றி வாழமுடியும்.

## எனக்கு எச்.ஐ.வி. பரிசோதனை செய்யப் பயமாகவுள்ளது. நான் எப்படி இதைக் கையாள வேண்டும்?

எச்.ஐ.வி.க்கு பரிசோதிப்பது என்பது ஒரு பெரிய தீர்மானம். நீங்கள் சுகாதார ஆலோசகரோடு ஆலொசித்து நீங்கள் பரிசோதிப்பதற்கு இது நல்ல தருணமா என்று அறிந்து செயற்படவும். நீங்கள் விரும்பினால் ஒரு நண்பனை/நண்பியை அல்லது சமூக சேவையாளரையோ பரிசோதிக்கும் போதும், பரிசோதனை தரவுகள் பெறச் செல்லும் போதும் அழைத்துச் செல்லலாம்.

## நான் கர்ப்பமாக உள்ளேன். நான் எச்.ஐ.வி.க்கு பரிசோதித்தல் அவசியமா?

நீங்கள் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டவராகவும் கர்ப்பமாகவும் இருந்தால் உங்கள் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்ற 25 வீத வாய்ப்புண்டு. உங்கள் குழந்தைக்கு எச்.ஐ.வி.த் தொற்றைக் குறைக்க மருத்துவ வசதிகள் பலவும் இன்று உண்டு. உங்கள் வைத்தியர் எச்.ஐ.வி.யால் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி கூறவேண்டும். அந்த முறைகளில் இருந்து உங்களுக்கு [illegible] முறையை நீங்கள் தேர்ந்தெடுக்களாம்.





## நான் என்னுடைய வைத்தியரிடம் அல்லது வைத்தியசாலையில் மட்டுமா பரிசோதிக்க முடியும்.

மூன்று விதமாக நீங்கள் எச்.ஐ.விக்கு பரிசோதிக்க வழிவகைகள் உண்டு.

*அநாமதேயப் பரிசோதனை:
இந்த பரிசோதனை மருத்துவசாலையில் உங்களால் குறிப்பிடப்பட்ட நேரத்தில் நடாத்தப்படும். ஒவ்வொருவருக்கும் ஒரு குறியீட்டை பரிசோதனையின் போது கொடுப்பார்கள். இந்த குறியீடு ஆய்வுக்கூடத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உங்களுக்கு மட்டுமே இந்த குறியீட்டு இலக்கம் தெரியும். அத்தோடு உங்களுக்கு மட்டுமே எச்.ஐ.வி. பரிசோதனையின் விளைவுகளும் தெரியும். உங்கள் வைத்தியர் உங்கள் அங்கீரமின்றி அறியாமல் பரிசோதிக்க முடியாது.

*பெயரடங்கா பரிசோதனை:
இது உங்கள் வைத்தியரால் நடாத்தப்படும். இங்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு குறியீட்டை பரிசோதனையின் போது கொடுப்பார்கள். ஆனால் உங்கள் வைத்தியருக்கும் உங்கள் குறியீட்டு இலக்கம் தெரியும். ஆதலால் வைத்தியரின் குறிப்பேட்டிலும் குறிப்பிடப்படும். நீங்கள் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் சுகாதார திணைக்களத்துக்கு தெரியப்படுத்துவார்கள்.

*பெயரடங்கிய பரிசோதனை:
இது உங்கள் வைத்தியரால் நடாத்தப்படும். இங்கு உங்களுடைய பெயர் ஆய்வுக்கூடத்துக்கு எடுத்துச் செல்லப்படும். ஆதலால் வைத்தியரின் குறிப்பேட்டிலும் குறிப்பிடப்படும். நீங்கள் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் சுகாதார திணைக்களத்துக்கு தெரியப்படுத்துவார்கள்.

